## மேல்நிலைக் கல்வி மதிப்பெண் சான்றிதழில் திருத்தம் மேற்கொள்வது சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு :

1. மேல்நிலைக் கல்வி அசல் மதிப்பெண் சான்றிதழில் பெயர், தலைப்பெழுத்து மற்றும் பிறந்த தேதி திருத்தம் மேற்கொள்ள ஏதுவாக பத்தாம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழை இணைத்து அனுப்ப வேண்டும்.

2. பத்தாம் வகுப்பை மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE) மற்றும் பிற மாநிலத்தில் பயின்று மேல்நிலைக் கல்வியை தமிழ்நாடு மாநில அளவில் பயின்ற தேர்வர்கள் தாங்கள் பயின்ற பள்ளியில் Bonafide Certificate–ல் தேர்வரின் பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தெளிவாக குறிப்பிட்டு திருத்தம் கோரும் மேல்நிலை தேர்வு மதிப்பெண் சான்றிதழுடன் இணைத்து சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர் மூலமாக அனுப்ப வேண்டும்.

3. மேல்நிலை தேர்வு எழுதுவதற்கு முன்னர் தமிழ்நாடு அரசிதழில் (TN GAZETTE) பெயர் மாற்றம் செய்திருந்தால் மட்டுமே மேல்நிலைக் கல்வி மதிப்பெண் சான்றிதழில் பெயர் மற்றும் தலைப்பெழுத்து தொடர்பான திருத்தம் மேற்கொள்ளப்படும். மேல்நிலை பொதுத் தேர்வெழுதி மதிப்பெண் சான்றிதழ் பெறப்பட்ட பிறகு அரசிதழில் மாற்றம் செய்யப்படும் பெயர், தலைப்பெழுத்து மாற்றம் மதிப்பெண் சான்றிதழில் திருத்தம் செய்து வழங்க இயலாது.